Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

12.11.2020 வியாழக்கிழமை தொடர்புக்கு 076 584 2222

## புதினம் தெரியுமோ?

பூநகரி பிரதேச சபையின்ர செயலாளர் , தான் ஏதோ ஜனாதிபதி எண்டு நினைச்சுக் கொண்டு ஆடின ஆட்டத்துக்கு ஒரு கடிவாளம் போடப்பட்டிருக்காம். பிரதேச சபையின்ர தவிசாளர் சில அதிகாரங்களை செயலாளருக்கு பங்கிட்டுக் குடுக்கலாம். சபை நிர்வாகம் ஊழலில்லாமல், சீராக நடக்க இப்பிடியான ஏற்பாடுகள் இருக்கு. ஆனா அதை தவிசாளர் விரும்பாட்டி குடுக்கத் தேவையில்லை. ஆனால் இப்ப செயலாளர் குளத்தோட கோவிச்சுக் கொண்டு எதையோ கழுவாம விட்ட மாதிரி 2

# கொழும்பில் மேலும் சில கொத்தணிகள்!

## பேரச்சமான நிலைமை உள்ளது என்று சுகாதார அமைச்சின் பேச்சாளர் தகவல்

கொழும்பு, நவம்பர் 12

கொழும்பில் மேலும் சில கொரோனாக் கொத்தணிகள் உருவாகக்கூடிய அபாயம் இருக்கின்றது.' என்று சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஜயருவன் பண்டார இன்று தெரிவித்தார் 2

## கொரோனா இறப்பு 46!

கொழும்பு, நவ. 12

இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 46ஆக அதிகரித்துள்ளது. இம்புல்கொடை பிரதேசத்தை சேர்ந்த 63 வயதுடைய நபர் மஹரகம அபேக்ஷ மருத்துவம 2

## விடைபெற்றார் மஹிந்த

கொழும்பு, நவ. 12

சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய இன்று தனது பதவியில் இருந்து ஓய்வுபெற்றார். 19ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் கீழ் கடந்த 2015ஆம் ஆண்டு ஏற்படுத் 2

## புலிகள் மீதான தடை நீக்கப்படக் கூடாது!

### பிரிட்டனிடம் இந்தியா வலியுறுத்தல்

லண்டன், நவம்பர் 12

பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் இருந்து புலிகளை நீக்கக்கூடாது. அந்த அமைப்பு மீதான தடையைத் தொடரவேண்டும் என்று பிரிட்டனிடம் இந்தியா வலி யுறுத்தியுள்ளது. 2000ஆம் ஆண்டளவில் பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் விடுதலைப் புலிகளையும் சேர்த்தது பிரிட்டன். எனினும் போர் முடிவுக்கு வந்து 10 ஆண்டுகளுக்கும் மேலாகக் கடந்து விட்டபோதிலும் இலங்கையில் 2





## சுவர் இடிந்து வீழ்ந்து 8 வயது சிறுவன் பலி

கிளிநொச்சி, நவ. 12

கிளிநொச்சியில் தற்காலிக வீட்டுச் சுவர் இடிந்து விழுந்ததில் 8 வயது சிறுவன் உயிரிழந்தான். தொடர்ச்சியாகப் பெய்த மழை காரணமாக குறித்த சுவர் இடிந்து வீழ்ந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. 2

## 2020ஆம் ஆண்டுக்கான கடன் செலுத்தப்பட்டது!

### பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, நவ. 12

2020ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டுக் கடன்களை இலங்கை அரசு செலுத்திவிட்டது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். 2

## தனியார் ஊழியர்களிடத்தில் அரசுக்குக் கரிசனையில்லை

### ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 12

கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள தனியார்துறை ஊழியர்கள் தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தவில்லை. இதனால் அவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற ஒதுக்கீட்டு சட்டமூலம்மீதான விவாதத்தில் 2



## சிறைக் கூரை மீது ஏறி கைதிகள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, நவ.12

பழைய போகம்பர சிறைச்சாலைக் கூரை மீது ஏறி கைதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. 2

## கொழும்பில் மட்டும் 30,000 தொற்றாளர்!

### கொழும்பு மாநகர சபையின் மருத்துவ அதிகாரி தகவல்

கொழும்பு, நவ. 12

கொழும்பில் மட்டும் 30 ஆயிரம் கொரோனாத் தொற்றாளர்கள் இருக்கக் கூடும் என, கொழும்பு மாநகர 2

## ஐ.எஸ். ஆயுததாரிகள் இலங்கையில் இல்லை

### இராணுவத் தளபதி மறுப்பு

கொழும்பு, நவ. 12

ஐ.எஸ்.ஐ.எஸ் (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பின் மிகவும் ஆபத்தான உறுப்பினர்கள் இலங்கைக்குள் நுழைந்துள்ளனர் என வெளியான தகவல்களை இலங்கை இரா 2

# கொழும்பில் மேலும்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
'கொழும்பு மாநகரசபை எல்லைக் குட்பட்ட பகுதியில் எழுமாறாக நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் நூற்றுக்கு 5 பேருக்கு வைரஸ் தொற்றிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் பார்த்தால் இப்பகுதியில் 30 ஆயிரம்வரை தொற்றாளர்கள் இருக்கக்கூடும். ஆகவே கொழும்பில் மேலும் சில கொத்தணிகள் உருவாகக்கூடிய அபாயம் இருக்கின்றது.
அதுமட்டுமல்ல நாட்டில் தற்போது 15 ஆயிரம் வரையானோருக்கே வைரஸ் தொற்றியுள்ளது எனக் கூறப்பட்டாலும் உரிய வகையில் பரிசோதனை நடத்தினால் அத்தொகை மேலும் அதிகரிக்கக்கூடும். அதேவேளை, கொரோனாவால் உலகளவில் 12 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். உலகில் தொற்று நோயினாலோ அல்லது போராலோ ஒரு வருடம் என்ற குறுகிய காலப்பகுதிக்குள் பெருமளவானோர் உயிரிழந்த சந்தர்ப்பம் இதுவாகும். எனவேதான் கொரோனா குறித்து மேலும் அவதானம் தேவை என வலியுறுத்தப்படுகின்றது' - என்றார். (ம-44)

## புதினம் தெரியுமோ?

பிரதேச சபை உறுப்பினர்களோட கொளுவிக்கொண்டு அந்தக் கோபத்தை சனத்தில காட்ட வெளிக்கிடுறாராம். சனங்கள் தங்கட சொந்தக் காசில கட்டின கடைக் கட்டடங்களை ஒரு கிழமைக்குள்ள அகற்றாட்டி, தான் இடிப்பன் எண்டு கடிதம் வேற போட்டிருக்கிறாராம். ஏற்கனவே போரால மட்டுமல்லாமல், புவியியல் ரீதியாகவும் பின்தங்கி நிக்குற ஒரு பகுதியில அபிவிருத்தி செய்யத்தான் வக்கில்லை எண்டா, இப்பிடி அழிவு வேலை செய்யாமல் இருக்கலாமே.
அதைவிட்டிட்டு சனத்துக்கு ஆப்படிக்க வெளிக்கிட்டு, கடைசியா அது பூமராங் மாதிரி செயலாளரின் அதிகாரங்களைப் பறிக்கிற மாதிரி ஆக்கிப் போட்டுது. இஞ்ச இவர் போட்ட ஆட்டத்துக்கு கண்டிப்பா இடமாற்றம் கிடைக்கிறது உறுதி எண்டு உள்வீட்டுத்தகவல். அப்பிடி மாற்றம் வந்த இவரின்ர சேவைத் தகுதியின்ர அடிப்படையில எங்கையாவது ஒரு பிரதேச சபையில செயலாளராக போக முடியாதாம் வேணுமண்டா நிர்வாக உத்தியோகத்தராத் தான் போகலாமாம். அந்தப் பதவியில இப்பிடி எல்லாம் தான் தோன்றித்தன விளையாட்டெல்லாம் காட்ட முடியாது.

-பட்சி

## கொரோனா இறப்பு...

னையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்துள்ளார். குறித்த நோயாளி உயிரிழந்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் அவருக்கு கொரோனாத் தொற்று இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
வெள்ளணுப் புற்றுநிலை அதிகரித்தல் மற்றும் மூச்சு மண்டலத்தில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக இவர் உயிரிழந்துள்ளார். எனினும் குறித்த இறப்பு கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட இறப்பு என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார். (ம-இ)

## புலிகள் மீதான ...

எவ்வித வன்முறையும் நிகழாததை அடுத்து புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்த நிலையி லேயே பிரிட்டனில் புலிகள் மீதான தடை நீக்கப்பட வுள்ளது என்று அண்மையில் தெரிவிக்கப்பட்டது. இதற்கு இலங்கையின் வெளிவிவகார அமைச்சு கடும் கண்டனத்தைத் தெரிவித்தது. இந்த நிலையில் புலிகள் மீதான தடையை நீக்கக்கூடாது என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.
இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி, இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ ஆகியோரின் படுகொலைகளுக்கு புலிகளே காரணம் என்று இந்தியா

## விடைபெற்றார்...

தப்பட்ட சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவின் பதவிக்காலம் இன்றுடன் முடிவடைகின்றது. இதனையடுத்து 20ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு அமைய ஏற்படுத்தப்படும் புதிய தேர்தல் ஆணைக்குழு அடுத்த வாரம் நியமிக்கப்படஉள்ளது. (ம-இ)

## தனியார்....

கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
'இலங்கையில் தனியார் துறையில் 60 லட்சம் பேர் பணிபுரிகின்றனர். இதில் 17 லட்சம் பேர் நாட் சம்பளத்தை நம்பியுள்ளனர். கொரோனா வைரஸ் தாக்கத்தால் 50 வீதம், 75 வீதம் என சம்பளம் குறைக்கப்பட்டுள்ளது. முதலாம் அலையின்போது ஒரு லட்சம்பேர் தொழில் இழந்தனர் என புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. தற்போது அந்தத் தொகை மேலும் அதிகரித்திருக்கும். நிலைமை இப்படி இருக்கையில் தனியார் துறைமீது அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை. அவர்களுக்கான நிவாரணங்கள் வழங்கப்படவில்லை. ஆனால் ஆர்ஜென்டினா போன்ற நாடுகளில் அரசாங்கமே சம்பளத்தை வழங்கி வருகின்றது' என்றார். (ம-44)

## சுவர் இடிந்து வீழ்ந்து...

கிளிநொச்சி பொலிஸ் பிரி விக் குட்பட்ட தொண்டமான்நகர் பகுதியிலேயே குறித்த சம்பவம் இன்று நண்பகல் 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.
உணவருந்திக் கொண்டிருந்தபோதே சிறுவன் மீது சுவர் வீழ்ந்துள்ளது. பின்னர் அயலவர்களின் உதவியுடன் சிறுவன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதிலும் சிகிச்சை பயனளிக்காமல் சிறுவன் உயிரிழந்தான். நிரோயன் நுசாந்தன் என்ற சிறுவனே உயிரிழந்தவனாவான். சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-6,214,ரி2)

## 2020ஆம் ஆண்டுக்கான...

2020ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலத்தை இன்று நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கை கடும் கடன் நெருக்கடியில் உள்ளது என்ற எண்ணத்தை ஏற்படுத்துவதற்கு எதிர்கட்சியினர் முயற்சிகளை மேற்கொள்கின்றனர். எனினும் தற்போதைய நிர்வாகம் கடன் விவகாரத்தினை சிறப்பாக கையாண்டுள்ளது. 2020ஆம் ஆண்டுக்கான கடன்களைச் செலுத்திவிட்டோம். வலுவான பொருளாதார திட்டங்களை முன்னெடுத்ததன் காரணமாகவே இதனை செய்ய முடிந்தது. தேவையற்ற இறக்குமதிகளுக்கு தடை தொடரும், தேவையற்ற வெளிநாட்டுக் கடன்களை இடைநிறுத்தவும் தீர்மானித்துள்ளோம் என்றார். (ம-இ)

## ஐ.எஸ். ....

ணுவம் நிராகரித்துள்ளது.
பிரித்தானியாவின் சண் செய்தித்தாளில் வெளியான செய்தியை இராணுவத் தளபதி நிராகரித்துள்ளார். அவ்வாறானவர்கள் இலங்கைக்குள் நுழைவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.
ஐ.எஸ் அமைப்பின் மிகவும் ஆபத்தான உறுப்பினர்கள் இலங்கைக்கு வந்துள்ளனர் என பிரிட்டனின் சண் செய்தித்தாள் தெரிவித்துள்ளது.
சிரிய, ஈராக்கில் தமது கட்டுப்பாட்டின் கீழ் காணப்பட்ட நிலங்களை ஐ.எஸ் இழந்த பின்னர் மிகவும் ஆபத்தான ஐ.எஸ் உறுப்பினர்கள் இலங்கைக்குள் நுழைந்துள்ளனர் என சண் தெரிவித்துள்ளது. ஐ.எஸ் அமைப்பு தீவிரமாக செயற்படும் நாடுகளின் விபரங்களை வெளியிட்டுள்ள சண் இலங்கையும் அதிலொன்று என குறிப்பிட்டுள்ளது.
ஐ.எஸ் அமைப்பு தனது சாம்பலில் இருந்து மீண்டும் எழுகின்றது, சர்வதேச அளவில் கொலைகள் மற்றும் குழப்ப நடவடிக்கைகளில் அந்த அமைப்பு ஈடுபடுகின்றது என சண் தெரிவித்துள்ளது. மொசாம்பிக்கின் வடபகுதியில் ஐ.எஸ் அமைப்பின் தாக்குதலில் ஐம்பதுக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டதை சண் சுட்டிக்காட்டியுள்ளது. (ம-இ)

## கொழும்பில் மட்டும்....

சபையின் பிரதான வைத்திய அதிகாரி மருத்துவர் ருவன் விஜேமுனி தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொழும்பில் எதேச்சையாக 400 பேருக்கு பி.சி.ஆர் சோதனைகள் மேற்கொண்ட போது அவர்களில் 19 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இது 5 சதவீதமான நிலைமை. இதனடிப்படையில் பார்க்கும்போது கொழும்பில் மட்டும் சுமார் 30 ஆயிரம் தொற்றாளர்கள் இருக்கலாம் என்று தோன்றுகின்றது. மக்கள் இந்த விடயத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என்றார். (ம-இ)

## சிறைக் கூரை மீது ஏறி....

சிறைக்கைதிகளின் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அந்த சிறைச்சாலை ஒதுக்கப்பட்டுள்ளது. அங்கு சிறைச்சாலையில் 800 க்கு அதிகமான கைதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.
அவர்களில் 30 கைதிகள் மற்றும் இரு அதிகாரிகளுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந் நிலையில் தங்களுக்கும் கொரோனா தொற்று ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றும் உடனடியாக பிசிஆர் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் அல்லது வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் எனக் கோரியே கைதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது. (வ-இ)

# தொண்டு நிறுவனங்களால் இயற்கை வீட்டுத் தோட்டம்

கிளிநொச்சி, நவ.12

இயற்கை முறையில் பயிரிடுவதிலுள்ள பயன்களைக் கருத்தில் கொண்டு ஏழு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஒன்றிணைந்து ஒரு நடைமுறைத் திட்டத்தை உருவாக்கியுள்ளன.

அந்தவகையில் புதிய வாழ்வு அறக்கட்டளை, சர்வதேச பரந்தன் பழைய மாணவர் சங்கம், கிளிநொச்சி மக்கள் அமைப்பு, ரட்ணம் அறக்கட்டளை, கல்வி பொருளாதார அபிவிருத்தி அமைப்பு , விருட்சம், தாமரை ஆகிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் இந்த நடைமுறைத் திட்டம் உருவாக்கப்பட்டது.

இத்திட்டத்துக்கு பரந்தனில், குமரபுரம், காஞ்சிபுரம், கமறிக்குடா ஆகிய கிராமங்களில் வாழும் 97 குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களின் குடியிருப்புக்களில் பயிர்ச் செய்கைக்கு போதிய நிலம்,



நன்னீர் வசதி, பாதுகாப்புச் சுற்று வேலி மற்றும் சூரிய ஒளி ஆகியன உள்ளனவா என்பது உறுதிப்படுத்திக்கொள்ளப்பட்டது. தேர்வான பயனாளர்களின் பயிர்ச் செய்கைக்கு வழிகாட்டல் ஆலோசனைகள் வழங்க ஒரு தகுதியும் அனுபவமும் கொண்ட முழுநேர அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார்.



இவர்களுக்கு வெண்டி, கத்தரி, தக்காளி, கறிமிளகாய், புடோல், பாகல், மிளகாய் ஆகியவற்றுடன் மஞ்சள், இஞ்சி, ஆகிய பயிர்களும் வழங்கப்பட்டதுடன் முருங்கை மற்றும் கீரை வளர்ப்பும் ஊக்குவிக்கப்பட்டது. (ற-222)

## ஹொட்டல்களுக்கு பாதுகாப்புச் சான்றிதழ்

கொழும்பு, நவ.12

இலங்கையில் சுற்றுலாத்துறையைச் சேர்ந்த 40 இற்கும் மேற்பட்ட ஹொட்டல்களுக்கு அடுத்த வாரம் முதல் பாதுகாப்புக்கான சான்றிதழ் வழங்கப்படவுள்ளது என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கொவிட் 19 தொற்று நிலைமைக்கு மத்தியில் தமது தொழிற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஆர்வமாக வுள்ள மற்றும் தமது அதிகாரசபையில் பதிவுசெய்துள்ள ஹொட்டல்களுக்கே இந்தச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

கொரோனாவுக்கு பின்னர் விடுமுறையைக் கழிப்பதற்கு இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு உத்தரவாதமளிக்கும் வகையில் இந்தச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. (ற-ரி4)



## மரக்கன்று வழங்கல்

யாழ்ப்பாணம் வலிகாமம் பனை தென்னை வள. அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் கொத்தணியில் மரக்கன்று வழங்கும் நிகழ்வு தலைவர் செ. செல்வராஜா தலைமையில் நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் சங்க நிர்வாக உறுப்பினர்கள் பொது முகாமையாளர்கள் பணியாளர்கள் என. கலந்துகொண்டு மரக்கன்றுகளை பெற்றுக்கொண்டனர். (வ-63)

## தெல்தெனியவில் 13 தொற்றாளர்கள்

கொழும்பு, நவ.12

தெல்தெனிய சுற்று வட்டாரத்தில் 13 கொரோனாத் தொற்றாளர்கள் நேற்று இனங்காணப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மற்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

இவர்களில் 12 பேர் தள வைத்தியசாலையிலும், ஒருவர் பொல்கொல்ல கல்வியியல் கல்லூரியிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அந்த வகையில் தெல்தெனிய தள வைத்தியசாலையில் தற்போது 96 கொரோனா நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தெல்தெனியவில் ஏழு பொலிஸ் பிரிவுகளில் 454 பேர் சுய தனிமைப் படுத்தப்பட்டனர். தெல்தெனிய, ரங்கல, உடதும்பர, ஹசலக முதலிய பொலிஸ் பிரிவுகளில் 290 பேர் அவர்களுடைய வீடுகளில் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.(ற-இ)

## பனிக்கன்குளத்தில் வாகன விபத்து



முல்லைத்தீவு, நவ.12

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ9 வீதியின் பனிக்கன்குளம் பகுதியில் நேற்று இரவு, வாகன விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது. வவுனியா நோக்கி பெக்கோ இயந்திரத்தை ஏற்றி வந்த வாகனம் ஒன்று அதன் சில்லுக் காற்றுப் போனதன் காரணத்தால் வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் வவுனியாவை நோக்கிச் சென்ற இன்னுமொரு கென்டேனர் பாரவூர்தி வாகனம் வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தில் மோதுண்டு விபத்துக்குள்ளானது. இதில் வாகனங்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ள நிலையில், உயிர் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இச் சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற-246)

## ஊரடங்கை மீறிப் பயணித்த 32 பேர் தனிமைப்படுத்தலில்

மட்டக்களப்பு, நவ.12

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் அமுலில் உள்ள ஊடரங்குச் சட்டத்தை மீறி ஆடைத் தொழிற்சாலைக்கு ஊழியர்களை ஏற்றிச் சென்ற பேருந்து இடைமறிக்கப்பட்டு அதில் பயணித்தோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்தார். ஓட்டமாவடியில் இருந்து வெளிப்பிரதேசத்தில் உள்ள தனியார் ஆடைத் தொழிற்சாலைக்கு 32 தொழிலாளர்கள் பேருந்தில் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளனர் என சுகாதார தரப்பினருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.நௌபர் தலைமையில் நடைபெற்ற சோதனையில் பேருந்து தடுக்கப்பட்டு அதில் பயணம் செய்த அனைவரும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (வ-150)



## தனிமைப்படுத்தப்பட்டோருக்கு உலர் உணவுப் பொதிகள்

மன்னார், நவ.12

கொரோனாத் தொற்று சந்தேகத்தில் நானாட்டான் பிரதேசத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 12 குடும்பங்களுக்கான உலருணவுப் பொதிகள் தனியார் தொண்டு நிறுவனம் ஒன்றால் நானாட்டான் பிரதேச செயலாளர் மா. சிறிஸ்கந்தகுமாரிடம் கையளிக்கப்பட்டது.

அவை நானாட்டான் பிரதேசத்தில் மடுக்கரை வங்காலை போன்ற பகுதிகளில் தனிமைப் படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-213)



# தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளை விமர்சிக்கும் தகுதி சுரேனுக்கு இல்லை

### சி.வி.கே. சிவஞானம் பதிலடி

கொடிகாமம், நவ.12

அரசால் நியமிக்கப்பட்ட சுரேன் ராகவன் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் எங்களுடைய கைதிகள் விடுதலை பற்றி பேசலாம். ஆனால் வடக்கு - கிழக்கு சார்ந்த தமிழ் தேசியம் சார்ந்த அரசியல் வாதிகளின் செயல்பாட்டை விமர்சிக்கும் உரிமை அவருக்கு கிடையாது என வடக்கு மாகாண முன்னாள் அவைத் தலைவர் சிவிகே சிவஞானம் தெரிவித்துள்ளார்.



அண்மையில் இடம்பெற்ற அமரர் நடராஜா ரவிராஜின் நினைவு தினத்தில் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், சுரேன் ராகவன் தற்போது பல விடயங்கள் பேசுகின்றார் குறிப்பாக அரசியல் கைதிகள் விடுதலை பற்றி பேசுகின்றார். நீதி அமைச்சரிடம் கேள்வி கேட்கின்றார் ஆளுநராக மைத்திரிபால சிறிசேனவுடைய முகாமையாளராக அந்த 8 மாத காலமாக இருந்த போது இதையெல்லாம் செய்யாமல், இன்னொரு ஆட்சி வந்ததன் பிறகு பேசுவதென்பது தமிழ் மக்களை ஏமாற்றும் வேலையாகவே இருக்கும். ஆளுநராகவும் அவருடைய செயற்பாடுகளில் நிறைய கருத்து வேறுபாடுகள் உள்ளன.

முக்கியமாக யாழ் குடா நாட்டுக்கான நீர் விநியோகம் சம்பந்தமான அவரது செயல்பாடு ஒரு விரயமான செயற்பாடாகவே அமைந்திருக்கிறது எனத் தெரிவித்தார். (வ-159)

# தடையை மீறினால் கட்டாய சுயதனிமை!

### பிரதி பொலிஸ்மா அதிபர் அதிரடி உத்தரவு

கொழும்பு, நவ.12

மேல் மாகாணத்தை விட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட்ட போதிலும், சட்டவிரோதமாக வெளியேறி ஏனைய மாவட்டங்களுக்குச் செல்லும் நபர்கள் தொடர்பான தகவல்களை சேகரிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தடையை மீறி ஒருவர் மேல் மாகாணத்தில் இருந்து இன்னொரு பிரதேசத்துக்குள் பிரவேசித்தால், அவரை 15 நாள்களுக்கு சுயதனிமைப்படுத்தலுக்கு அனுப்புமாறு பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ந-இ)

# மாட்டுடன் மோதிய மோ. சைக்கிள்: ஒருவர் காயம்

சாவகச்சேரி, நவ.12

நடுவீதியில் நின்ற மாட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணித்த 56 வயது நபர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று இரவு புதுக்காடு - தாளையடி வீதியில் இடம்பெற்றது. பளை மாசாரையைச் சேர்ந்த இந்த நபர், மோட்டார் சைக்கிளில் சென்ற போது வீதியின் குறுக்கே மாடு நின்றதை அவதானிக்காததால் அதனுடன் மோதி விபத்துக்கு உள்ளானார் எனத் தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்த நபர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-9)

# யாசகர்களால் கொரோனா அபாயம்:

### நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

வவுனியா, நவ.12

வவுனியா நகர்ப்பகுதியில் யாசகம் பெற்று வாழ்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் அவர்களால் கொரோனாத் தொற்று ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வவுனியா பழைய பேருந்து நிலையம் உட்பட நகர் பகுதிகளின் சில இடங்களிலும், குடியிருப்பு குளத்தின் ஓரங்களிலும் குடும்ப சகிதமாக வருகை தந்து எந்தவிதமான சுகாதார நடைமுறைகளையும் கடைப்பிடிக்காமல் இவர்கள் தங்கி உள்ளனர். இதனால் கொரோனா வைரஸ் காவிகளாக இவர்கள் செயற்படக்கூடிய சந்தர்ப்பம் அதிகமாக உள்ளது. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந -இ)

# 'மெனிங்' பணியாளர்களுக்கு கட்டாய பி.சி.ஆர் சோதனை

கொழும்பு, நவ.12

கொழும்பு மெனிங் சந்தையை அண்மித்த பகுதியில் உள்ள அனைவரும் பி.சி.ஆர் பரிசோதனையின் மூலம் வைரஸ் தொற்று இல்லை என்பதை உறுதிசெய்ய வேண்டும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொழும்பு மெனிங் சந்தையை மீண்டும் திறப்பது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்,

மெனிங் சந்தையில் பணியாற்றும் அனைவரும் பி.சி.ஆர் பரிசோதனையை மேற்கொள்வது முக்கியமானது. கொழும்புக்கு அப்பால் பேலியகொடவில் தற்காலிகமாக மெனிங் சந்தையை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மெனிங் சந்தையில் கடமையாற்றும் அனைவரும் இதில் கலந்துக்கொள்ள முடியும். இருப்பினும் பி.சி.ஆர் பரிசோதனையின் மூலம் இவர்களுக்கு வைரஸ் தொற்று இல்லை என்பதை உறுதிசெய்ய வேண்டும்.

பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ள உள்ளவர்களுக்கு அதற்கான பெயர்ப்பட்டியலை வழங்குவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும். நிஷாந்த தர்மசேகர என்ற அதிகாரியை 071 8591 551 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொண்டு விபரங்களை வழங்க முடியும் என்று தெரிவித்துள்ளார். (ந-ரி4)

# மெனிங் சந்தைக்கு பதிலாக பேலியகொடவில் புதிய சந்தை

கொழும்பு, நவ.12

கொழும்பு மெனிங் சந்தை மூடப்பட்டதால் கடுமையான பாதிப்புகளை எதிர்கொண்டுள்ள மரக்கறி வியாபாரிகளுக்கு தங்களது உற்பத்திகளை விற்பனை செய்து கொள்ளும் பொருட்டு பேலியகொட பிரதேசத்தில் புதிய இடமொன்றை ஒதுக்கீடு செய்வது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இதற்கென அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான இடமொன்றை ஒதுக்குவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், சுகாதார நடைமுறைகளை முறையாகப் பின்பற்றி விரைவில் மெனிங் சந்தையில் கொடுக்கல் வாங்கல்களை ஆரம்பிக்குமாறு பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மேலும், விவசாய உற்பத்திகளுக்காக விவசாயிகளுக்கு சிறந்த விலையைப் பெற்றுக்கொடுக்கவும், அதன் மூலம் மரக்கறிகளுக்கு தட்டுப்பாடு ஏற்படாத வகையில் நுகர்வோருக்குத் தேவையான மரக்கறிகளை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. (ந-ரி4)



# தீபாவளி பண்டிகையை எளிமையாகக் கொண்டாடுங்கள்

### பெருந்தோட்ட மக்களிடம் வேண்டுகோள்

நுவரெலியா, நவ.12

தீபாவளி பண்டிகையை மிக எளிமையாகக் கொண்டாடுமாறு நுவரெலியா மாவட்ட செயலாளர் பெருந்தோட்ட மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும், தோட்டத் தொழிலாளர்கள் நெருக்கமாக வாழும் லயன் குடியிருப்புகளில் எவருக்கேனும் வைரஸ் தொற்றினால், அது வேகமாகப் பரவும் சாத்தியம் உள்ளது. எனவே, சமயக் கிரியைகளுக்கு மாத்திரம் முக்கியத்துவம் அளித்து முடிந்தவரை வீடுகளில் தங்கியிருக்க வேண்டும். கோயில் பூஜைகளில் கூடுதலான அடியார்கள் கலந்துகொள்ள ஆலய நிர்வாகிகள் இடமளிக்க வேண்டாம். கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் வேலை செய்யும் இளைஞர் யுவதிகள் தீபாவளிக்காக ஊர் திரும்புவதை முடிந்தவரை தவிருங்கள். அத்துடன் மதுபானசாலைகளை மூடுமாறு கலால் திணைக்கள ஆணையாளரிடம் கேட்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். (ந -ரி4)

# இந்திய மீனவர் சுரண்டலால் பட்டினிச் சாவு அபாயம்!

## முல்லை.மீனவர்கள் விரக்தி

முல்லைத்தீவு, நவ.12

முல்லைத்தீவு கடற்பரப்பில் அண்மைக் காலமாக இந்திய மீனவர்களின் வருகை அதிகரித்துள்ளதால் கடல்வளங்கள் அழிக்கப்படுவதுடன், மீனவர்களின் வாழ்வாதாரமும் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் ஜோன்சன் தெரிவித்துள்ளார். இந்நிலை தொடருமானால் முல்லை மீனவர்களுக்கு பட்டினிச் சாவு அபாயம் ஏற்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொரோனா அச்சநிலையை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, இந்திய இழுவைப்படகுகள் எமது கடற் பரப்பினுள் தொடர்ச்சியாக தொழிலில் ஈடுபடுமானால், கடற்றொழிலை நம்பி வாழும் எமது மீனவர்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்க நேரிடும். இவர்களின் வருகையை அரசு கட்டுப்படுத்தாவிடில், மீனவர்கள் கடன் சுமைகளிலிருந்து மீள முடியாத நிலை ஏற்படும். எனவே உரிய அதிகாரிகளும், அரசும் இவ்விடயத்தைக் கவனத்தில் கொண்டு, இவர்களின் அத்துமீறிய வருகையைத் தடைசெய்ய வேண்டும் என்றார். (ற-246)

# காற்றில் பறந்தது டக்ளஸ் வாக்குறுதி

## முல்லை.கடற்றொழிலாளர் சமாசத்தின் தலைவர் விசனம்

முல்லைத்தீவு, நவ.12

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகைக்குத் தீர்வு பெற்றுத் தருவதாக கடந்த 2013 ஆம் ஆண்டு வாக்குறுதி அளித்துள்ள நிலையில், அந்த வாக்குறுதியை இன்றுவரை நிறைவேற்றவில்லை என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத்தின் தலைவர் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

கடற்றொழிலாளர் சமாசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்திய இழுவைப் படகுகள் பிரச்சினை என்பது இன்று நேற்றல்ல, கடந்த பத்து வருடங்களாக தொடர்ச்சியான ஒரு பிரச்சினையாக உள்ளது.

இது தொடர்பில் கடந்த 2013 ஆம் ஆண்டு நாம் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தபோது, அங்கு வருகை தந்த அப்போதைய புணர்வாழ்வு அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தப் பிரச்சினைக்கு விரைவில் ஒரு தீர்வைப் பெற்றுத் தருவதாக வாக்குறுதியளித்தார். ஆனால் இன்றுவரையில் இப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கவே இல்லை என்றார். (ற-246)

# சிறுமியை வன்புணர்ந்தவருக்கு ஐந்து வருட கடூழியச் சிறை!



திருகோணமலை, நவ.12

திருகோணமலையில் ஒன்பது வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் ஒருவருக்கு திருகோணமலை மேல் நீதிமன்றம் ஐந்து வருட கடூழிய சிறைத் தண்டனையை நேற்று விதித்துள்ளது.

2012 ஆம் ஆண்டு சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இந்தப் பாலியல் துஷ்பிரயோகம் இடம்பெற்றுள்ளது என்று வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது. இதேவேளை இது தொடர்பில் திருகோணமலை மேல் நீதிமன்றில் குற்றப்பகிர்வு பத்திரம் ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த இரண்டு குற்றச்சாட்டுக்களிலும் அந்த நபர் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டதையடுத்து நேற்று திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்க வாசகர் இளஞ்செழியனால் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஒரு இலட்சம் ரூபா நஷ்டஈடு செலுத்துமாறும் செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலும் ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்குமாறும் அவர் கட்டளையிட்டார். (ற-இ)

கொவிட் – 19 பயிற்சி வகுப்பு

# பங்குபற்றாத சாரதிகள் வர்த்தகத்தில் ஈடுபடத் தடை

## மன்னார் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எச்சரிக்கை

மன்னார், நவ.12

மன்னாரிலிருந்து வெளி மாவட்டங்களுக்கு மீன் மற்றும் பொருள்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்யும் சாரதிகள் மற்றும் உதவியாளர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளாதவர்கள், இவற்றில் ஈடுபட அனுமதி வழங்கப்படமாட்டாது என மன்னார் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மன்னார் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் தெரிவிக்கையில்,

கொவிட் 19 தொடர்பாக மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற மீளாய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, மன்னார் மாவட்டத்தில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொழிலில் ஈடுபடுபவர்கள் கட்டாயமாக பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதற்கமைவாக நேற்று புதன்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இவற்றில் ஈடுபடுகின்ற மன்னார் மாவட்ட சாரதிகளுக்கும் உதவியாளர்களுக்குமான பயிற்சி வகுப்பு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இக் கூட்டத்தில் நூறு பேர் கலந்துகொள்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும், 12 நபர்கள் மட்டுமே கலந்து கொண்டிருந்தனர். இது எம் மாவட்டத்துக்கு ஆரோக்கியமானது அல்ல.

இப் பயிற்சியில் கலந்துகொள்ளாத சாரதிகள் மற்றும் உதவியாளர்கள் வெளி மாவட்டங்களுக்குச் சென்று பொருள்களை ஏற்றி இறக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனத் தெரிவித்துள்ளார். (ந-60)





வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பண்டாரிக்குளம், வேப்பங்குளம், ரகுபாக்கம், சாளம்பைக்குளம், பம்பைமடு உள்ளிட்ட பகுதிகளில் கொவிட் 19 காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட 93 குடும்பங்களுக்கு வவுனியா பிரதேச செயலகத்தால் உதவித்திட்டங்கள் இன்று வழங்கப்பட்டன. இதனடிப்படையில், முதல் கட்டமாக 5 ஆயிரம் ரூபா பெறுமதியான சீனி, அரிசி, பருப்பு உள்ளிட்ட உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ந- 18)



# கிழக்கு பாதுகாப்பு படையினரால் கொவிட் - 19 செயல்பாட்டு நிலையம்

மட்டக்களப்பு, நவ.12

கிழக்கு பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் 23ஆவது பிரிவு இராணுவத்தின் 231ஆவது பிரிகேட் படையினரால் மட்டக்களப்பு மாவட்டத்துக்கான முதல் கொவிட் 19 செயல்பாட்டு மத்திய நிலையம் நிறுவப்பட்டுள்ளது. கொவிட் 19 தொடர்பான எந்தவொரு சவால்களையும் முறியடிக்கும் வகையில் மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நிறுவப்பட்டுள்ள இம் மத்திய நிலையம் சுகாதார அதிகாரிகள், மாவட்டச் செயலாளரின் பிரதிநிதிகள், பொலிஸ் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், படை வீரர்கள் மற்றும் துறை சார் நிறுவன அதிகாரிகள் ஆகியோரால் நிர்வ கிக்கப்படுகிறது. இந்த மத்திய நிலையத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ந- ரி4)

# ஊடகவியலாளரைத் தாக்கிய மூவர் பொலிஸாரால் கைது!

யாழ்ப்பாணம், நவ.12

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டில் மூன்று பேர் கைது செய்யப் பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்த னர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாள ரான எஸ். முகுந்தன் என்பவர் மீது நேற்றுப் புதன்கிழமை, வன்முறை கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவரு வதாவது,

நாட்டில் கொரோனோத் தொற்று அதிகரித்து வரும் நிலையில் சுகாதார விதிமுறைகளைப் பேணாது தமிழ்க்கொடி எனும் அமைப்பு உதவி வழங்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன என குற்றஞ்சாட்டி, அது தொடர் பில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண் டும் என்று அவர் தனது முகநூலில் நேற்று முன்தினம் பதிவிட்டிருந்தார்.

அந்தப் பதிவை நீக்கக்கோரி தமிழ்க் கொடி எனும் அமைப்பைச் சேர்ந்தவர்கள் கடும் அழுத்தத்தைக் கொடுத்ததுடன் மிரட்டலும் விடுத்திருந்தனர். அதற்கு அவர் சம்மதிக்காத நிலையில் நேற்று அவரது வீட்டுக்குள் அத்து மீறி நுழைந்த கும்பல் ஒன்று அவர் மீது தாக்கு தல் நடத்தியதுடன், அவரது தொலைபேசி யையும் பறித்துச் சென்றுள்ளது.

இச் சம்பவம் குறித்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஊடகவியலாளரால் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டின் அடிப்ப டையில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், தாக்குதல் மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டில் விமல் , கிஷோகுமார் மற்றும் ஜீவமயூரன் ஆகிய மூவரைக் கைது செய்துள்ளனர். (ற-26)

# வீடு திரும்பியவர் மீது தாக்குதல்

சாவகச்சேரி, நவ.12

வேலை முடித்து திரும்பிய 32 வயது நபர் ஒருவர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று இரவு மந்துவில் மேற்கில் இடம்பெற்றுள் ளது. காயமடைந்த நபர் சாவகச்சேரி மருத்து வமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (வ-9)

# தொற்றா நோயாளர்களின் ஆயுள்காலம் கொரோனாத் தொற்றால் வீழ்ச்சியடையும்

## சுகாதார அமைச்சின் ஊடக பேச்சாளர் எச்சரிக்கை

கொழும்பு, நவ.12

தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டால், அவர்களின் ஆயுள்காலம் குறைய வாய்ப்புக்கள் அதி கம் என சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் ஜயருவன் பண்டார தெரிவித் துள்ளார். இந்நிலையில் நீரி ழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், இதயம் சம்பந்த



மான நோய்களால் பாதிக்கப் பட்டவர்கள் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானால் அவர்களின் ஆயுள்காலம் 10 வருடங்கள் குறையக்கூடும் என அவர் எச்சரித்துள்ளார்.

அதற்கமைய 60 வயது கடந்த வர்கள் கொரோனாத் தொற் றால் உயிரிழப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் என சுட்டிக்காட்டியுள்ள அவர், கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்கள் வீடுகளில் உயி ரிழப்பதற்கு அவர்களின் கவனக்குறைவே முக்கிய காரணம் எனவும் மேலும் தெரிவித்துள்ளார். (ந-இ)

# பெரும்போக பயிர்ச் செய்கை; தீர்மானித்த திகதியில் மாற்றம்

மன்னார், நவ.12

பெரும்போக விவசாய நடவடிக்கையில் மாற்றம் செய்வது தொடர்பான கூட்டம் மன்னார் பதில் மாவட்டச் செயலர் சிவபாலன் குணபாலன் தலைமையில் மன்னார் மாவட்டச் செயலத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் மன்னார் பதில் மாவட்டச் செயலர் தெரி வித்துள்ளதாவது,

கட்டுக்கரை குளத்தின் கீழ் பெரும்போகம் செய்வது தொடர்பில் முன்னர் மேற்கொண்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்த முடியாத நிலை உள்ளது. அதைய டுத்து மீள் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் திகதிகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி, டிசம்பர் மாதம் 6ஆம் திகதிக்கு முன்னராக நான்கரை மாதங்களை கொண் டதான நெற்பயிர்களை விதைக்க வேண்டும். மூன்றரை மாத மற்றும் இரண்டரை மாத பயிர்ச் செய்கைகளை டிசம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன் விதைக்க வேண்டும்.

ஏற்கனவே கால்நடைகள் கட்டுப்படுத்தப்பட்டு 6ஆயிரத்து 500 ஏக்கர் காணிகள் விதைப்புக்கு உட்படுத்தப்பட்டுள் ளன. மேலும் கடைசி நீர் விநியோகத் திகதியாக மார்ச் மாதம் 21ஆம் திகதி ஆகவும், அறுவடைத் திகதி ஏப்ரல் முதலாம் திகதியாகவும் கால்நடைகள் மீள கொண்டு வரும் திகதியாக மே முதலாம் திகதியும் தீர்மானிக்கப்பட் டுள்ளது எனத் தெரிவித்தார். (வ-213)

# 14 லட்சம் குடும்பங்களுக்கு இதுவரை 5000 கொடுப்பனவு

கொழும்பு, நவ.12

நாட்டில் இதுவரையான காலப்பகுதிக்குள் 14 இலட்சத்து 9 ஆயிரத்து 578 குடும்பங்க ளுக்கு 5ஆயிரம் ரூபாய் கொடுப் பனவு வழங்கப்பட்டுள்ளது என அரசாங்கத் தகவல் திணைக்க ளம் அறிவித்துள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப் பட்ட காலப்பகுதிக்குள் தமது வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கு நிவாரணத்தை வழங்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டு வருகிறது.

இந்த நிலையில், இதுவரையில் கொடுப்பனவுகள் வழங்கப்ப டாத குடும்பங்களுக்கு 5ஆயிரம் ரூபா பணத்தை வழங்கும் நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுள்ளது என வும் அரசாங்க தகவல் திணைக் களம் அறிவித்துள்ளது. (வ-இ)



# 5000 குளங்கள் புனரமைப்பு; முதலாவது கூட்டம் மட்டக்களப்பில்

5ஆயிரம் குளங்களைப் புனரமைக்கும் செயல்திட்டத்தினை நாடு பூராகவும் நடைமுறைப்படுத்துவது தொடர்பி லான முதலாவது கூட்டமும் விவசாய அபிவிருத்திக் குழுவின் விசேட கூட்டமும் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை கரு ணாகரன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 17 கமநல சேவை நிலையங்களிலும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத் தப்படவுள்ளது. ஒவ்வொரு கமநல சேவை நிலைய பிரிவுகளிலும் மூன்று முதல் ஐந்து குளங்கள் தெரிவுசெய் யப்பட்டு எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கை முழுவதும் இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இவ்வேலைத்திட் டமானது ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்படமாட்டாது. மாறாக விவசாய அமைப்பினர், பொது மக்கள், நலன்விரும்பிகள், மாணவர் கள் மற்றும் தொண்டர்கள் மூலமா கவே இந்த வேலைத்திட்டங்கள் அமுல்படுத் தப்படவுள்ளன. மத்திய, மாகாண அரசாங்கத்தின் கீழ்வரு கின்ற 87 குளங்கள் இந்தத் திட்டத் தின் கீழ் மட்டக்களப்பில் அபிவி ருத்தி செய்யப்படவுள்ளன. (வ-இ)



# 40,000 இலங்கையர் மீளவும் நாட்டுக்கு

## தினேஷ் தெரிவிப்பு

கொழும்பு, நவ.12

மத்திய கிழக்கைச் சேர்ந்த 17 ஆயிரத்து 861 பேர் உள்ளடங்க லாக, 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட இலங்கையர்கள் நாட்டுக்குத் திருப்பி அழைத்து வரப்பட்டுள்ள னர் என்று வெளிவிவகார அமைச் சர் தினேஷ் குணவர்த்தன தெரி வித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் புலம் பெயர்வுக்கான வலைப்பின்னலை இலங்கையில் ஆரம்பித்து வைக் கும் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வெளிநாடுகளில் வேலைக்காகத் தங்கியிருக்கும் இலங்கையர்களில் கொரோனாவால் பாதிக்கப்படக் கூடிய நிலையில் உள்ளவர்க ளுக்கு அரசு உதவி செய்ய நடவ டிக்கை எடுத்துள்ளது.

அந்தவகையில் இவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்று வதற்கும், விமானம் மூலம் உலருணவு நிவார ணங் களை அனுப்பி வைப்பதற்கும், தற்காலிக தங்குமிட வசதிகளை வழங்குவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஜோர்தான், கட்டார் போன்ற நாடுகளில், வேலைவாய்ப்புக் களை இழந்தவர்களுக்கு வேறு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது -என்றார்.(றரி4)

## பிரிட்டனில் வேலையற்றோர் வீதம் உயர்வு

லண்டன், நவ.12

பிரிட்டனில் வேலையில்லாதோரின் எண்ணிக்கை 4.8 சதவீதமாக உயர்ந்துள்ளது. கடந்த செப்ரெம்பர் முதல் மூன்று மாதங்களிலேயே இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அங்கு 3 இலட்சத்து 14 ஆயிரம் பேர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என பிரிட்டன் தேசிய புள்ளிவிபர அலுவலகம் தெரிவித்துள்ளது.

வேலையில் இருப்பவர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 47 ஆயிரமாக குறைவடைந்துள்ளது.

கொவிட் - 19 தொற்று பரவலை அடுத்து வேலையில்லாதோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என பிரித்தானிய செய்திகள் தெரிவிக்கின்றன. (வ-இ)

# தலைகளை துண்டித்து 50 பேர் கோரக்கொலை

## வடக்கு மொசம்பிக்கில் தீவிரவாதிகள் அட்டூழியம்

லண்டன், நவ.12



வடக்கு மொசம்பிக்கில் இஸ்லாமிய பயங்கரவாதிகளால் 50க்கும் அதிகமானோர் தலை துண்டித்துக் கொல்லப்பட்டுள்ளனர் என அந்நாட்டு அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த ஆயுததாரிகள் கிராமம் ஒன்றின் மைதானத்தை படுகொலைத் தளமாக மாற்றி கொல்லப்பட்டவர்களின் உடல்களைச் சிதைத்துள்ளனர். மற்றொரு கிராமத்திலும் பலர் சிரச்சேதம் செய்யப்பட்டுள்ளனர் என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2017 தொடக்கம் எரிவாயு வளம் கொண்ட காபோ டெல்காடோ மாகாணத்தில் ஆயுததாரிகள் நடத்தும் தாக்குதல்களின் தொடர்ச்சியாகவே இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இஸ்லாமிய அரச (ஐ.எஸ்) குழுவுடன் தொடர்புபட்ட ஆயுதக்குழுக்கள் இங்கு காலூன்றி உள்ளன. முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட இந்த மாகாணத்தில் நடந்துவரும் மோதல்களில் இதுவரை 2 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டும் 4 லட்சத்து 30 ஆயிரம் பேர் வரை தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். (வ-இ)

## ஆர்மேனிய மக்கள் அமைதிக்கு எதிர்ப்பு

லண்டன், நவ.11

அஜர்பைஜான் உடனான போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்மேனியா பிரதமர் அலுவலகத்துக்கு முன்பு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நாகோர்னோகராபாக் மாகாணங்களுக்கு உரிமை கோரி இருநாடுகளுக்கும் இடையே ரஷ்யா முன்னிலையில் அமைதி ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

ஆனால் இந்த அமைதி ஒப்பந்தத்துக்குக் கண்டனம் தெரிவித்து ஆர்மேனியா தலைநகர் யெரெவனில் பிரதமர் அலுவலகம் மற்றும் நாடாளுமன்றம் முன்பு நேற்றைய தினம் போராட்டம் நடைபெற்றது. நாடாளுமன்றக் கட்டடத்தினுள் நுழைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் கண்ணாடிகளை அடித்து நொறுக்கியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## பலஸ்தீன முக்கியஸ்தரை பறிந்தெடுத்த கொரோனா

ஜெருசலேம், நவ.12

பலஸ்தீன விடுதலை இயக்க நிறைவேற்றுக் குழுவின் செயலாளர் நாயகமும், பலஸ்தீனத்தின் பிரதம மத்தியஸ்தருமான சேக் எரிக்கட் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி பல வாரங்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுமுன் தினம் உயிரிழந்தார். 65 வயதான எரிக்கட் 1991 முதல் இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனியர்களுக்கும் இடையிலான கிட்டத்தட்ட ஒவ்வொரு சுற்று சமாதான பேச்சுகளிலும் ஈடுபட்டிருந்தார். (வ-இ)

## பஹ்ரைன் பிரதமர் 84 வயதில் மறைவு

பஹ்ரைன் நாட்டு பிரதமர் கலிபா பின் சல்மான்அல்கலிபா 84 வயதில் நேற்று காலமானார் என அந்த நாட்டின் அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

1970 இல் இருந்து பஹரைன் நாட்டில் பிரதமராக அவர் கடமையாற்றி வந்தார். (வ-இ)





# ரஷ்யா முயற்சியில் கரபாக்கில் அமைதி!

மொஸ்கோ, நவ.12

அசர்பைஜானுக்கும் ஆர்மேனியாவுக்கும் இடையே ரஷ்யா முன்னிலையில் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக நகர்னோ கரபாக் பகுதியில் ரஷ்யா தனது அமைதிப் படையினரை நிலைகொள்ளச்செய்துள்ளது.

ரஷ்ய அமைதிப்படையினருடன் விமானமொன்று நேற்று புறப்பட்டுச் சென்றுள்ளது என ரஷ்ய பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

2000 படையினரையும் 90 துருப்புக்காவிகளையும், 380 வாகனங்களையும் ஏனைய ஆயுதங்களையும் நகர்னோ கரபாக் பகுதியில் நிலைகொள்ளச்செய்யவுள்ளோம் என ரஷ்யா தெரிவித்துள்ளது.

ஆர்மேனியாவிலிருந்து நகர்னோ கரபாக்கினை நோக்கி ரஷ்ய அமைதிப்படையினர் புறப்பட்டுச்செல்வதை ரஷ்ய தொலைக்காட்சிகள் காண்பித்துள்ளன.

ஆர்மேனியாவுக்கும் அசர்பைஜானுக்கும் இடையிலான யுத்தநிறுத்த உடன்படிக்கை மோதலுக்கு நிரந்தரத் தீர்வை காண்பதற்கு உதவும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இடம்பெயர்ந்த மக்கள் நகர்னோ கரபாக் நகருக்கு மீண்டும் திரும்பலாம் என தெரிவித்துள்ள புட்டின் போர்க்கைதிகளையும், கொல்லப்பட்டவர்களின் உடல்களையும் இருநாடுகளும் பரஸ்பரம் பரிமாறிக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார். (வ-இ)



# அமெ. தேர்தலில் மோசடி! விசாரணைக்கு அனுமதி!

வொஷிங்டன், நவ.12

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் முறைகேடு நடந்துள்ளது என முன் வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுத் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு அரச வழக்குத் தொடுநர்களுக்கு சட்டமா அதிபர் அனுமதி அளித்துள்ளார் என நீதித் திணைக்களத்தின் மூத்த அதிகாரியான வில்லியம் பார் தெரிவித்துள்ளார்.

வெளிப்படையான-நம்பகமான கூற்றுகள் தொடர்பில் மாத்திரமே விசாரணைகள் நடத்தப்படும். இவ்வாறான விசாரணைகள் பொதுவாக தனிப்பட்ட மாநிலங்கள் அளவில் இருந்தபோதும் அது வலுவான மற்றும்



விரைவான தீர்ப்பாக இருக்காது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் 3 ஆம் திகதி நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜோ பைடன் வெற்றி உறுதியாகியுள்ள நிலையில்ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அதனை ஏற்க மறுத்து தேர்தலில் மோசடி இடம்பெற்றுள்ளது என குற்றம்சாட்டி வருகிறார். (வ-இ)

# கோலி ஆடாதது பெரும் ஏமாற்றம்

## ஸ்டீவ் வோ கருத்து

புதுடில்லி, நவ.12


ஆஸ்திரேலியாவுக்கு எதிரான கடைசி 3 டெஸ்ட் போட்டியில் விராட்கோலி ஆடாதது ஏமாற்றமும், ஆச்சரியமும் அளிப்பதாக ஸ்டீவ் வோ தெரிவித்துள்ளார்.

இந்திய அணித் தலைவர் கோலிக்கு ஜனவரி முதல் வாரத்தில் குழந்தை கிடைக்க இருப்பதால் அவர் முதலாவது டெஸ்ட் போட்டி முடிந்ததும் நாடு திரும்பவுள்ளார். அடுத்த 3 டெஸ்ட் போட்டியில் அவர் விளையாட மாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் அணித் தலைவர் ஸ்டீவ் வோ கருத்து தெரிவித்த போது, ஆஸ்திரேலியாவுக்கு எதிரான கடைசி 3 டெஸ்ட் போட்டியில் கோலி விளையாடமாட்டார் என்பது ஏமாற்றமும், ஆச்சரியமும் அளிக்கிறது. இந்தத் தொடர்



விராட்கோலியின் கிரிக்கெட் வாழ்க்கையில் மிகவும் முக்கியமானது என்றாலும் குடும்பத்துக்கு தான் முன்னுரிமை கொடுக்க வேண்டும். கோலி இல்லாதது டெஸ்ட் போட்டித் தொடரில் விறுவிறுப்பைக் குறைக்கக் கூடும் - என்றார். (றஇ)



# நாயகன் போல்ட்!

புதுடில்லி, நவ.12

ஐ.பி.எல் தொடரின் இறுதிப்போட்டியில் மும்பை அணி வீரர் டிரெண்ட் போல்ட் ஆட்ட நாயகன் விருதைத் தட்டிச் சென்றுள்ளார்

டுபாயில் நடந்த 2020 ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடரின் இறுதிப்போட்டியில் டெல்லி கப்பிடல்ஸ் அணியை வீழ்த்தி ஐந்தாவது முறையாக மும்பை இந்தியன்ஸ் அணி சம்பியன் பட்டம் வென்றது. இந்த அணியின் வீரர் டிரெண்ட் போல்ட்க்கு ஆட்ட நாயகன் விருது வழங்கப்பட்டது. (ற-இ)



# பாக். டெஸ்ட் அணிக்கு பாபர் அசாம் தலைவர்

இஸ்லாமாபாத், நவ.12

பாகிஸ்தான் டெஸ்ட் அணித் தலைவராக பாபர் அசாம் நியமிக்கப்பட்டுள்ளார். இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் பாகிஸ்தான் அணி தொடரை இழந்ததை அடுத்து டெஸ்ட் அணியின் தலைவர் அசார் அலி மாற்றம் செய்யப்படுவார் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் பாகிஸ்தான் டெஸ்ட் அணித் தலைவர் பதவியிலிருந்து அசார் அலி நீக்கப்பட்டு, அவருக்குப் பதிலாக 26 வயதான பாபர் அசாம் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் டெஸ்ட், ரி-20 மற்றும் ஒருநாள் தொடர் அணிகளுக்கும் தலைவராக இருப்பார் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நேற்று அறிவித்துள்ளது. அடுத்த மாதம் இறுதியில் பாகிஸ்தான் அணி, நியூசிலாந்து சென்று 2 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடவுள்ளது. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டிக்குரிய இந்த தொடரின் முதலாவது ஆட்டம் டிசெம்பர் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், பாபர் அசாம் டெஸ்ட் அணித் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளார். (ற-இ)

# ஆஸி. தொடருக்கு ரசிகர்கள் அனுமதி

புதுடில்லி, நவ.12

இந்தியா - ஆஸ்திரேலியா கிரிக்கெட் தொடரை நேரில் கண்டுகளிக்க இரசிகர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த அணிகளுக்கிடையிலான போட்டி எதிர்வரும் 27 ஆம் திகதி தொடக்கம் ஜனவரி 19 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இரு அணிகள் இடையேயும் 3 ஒருநாள், மூன்று ரி20 மற்றும் 4 டெஸ்ட் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டி தொடரில் உள்ளூர் மாநில அரசின் வழிகாட்டுதலுக்குத் தகுந்தபடி ரசிகர்கள் போட்டியை நேரில் கண்டு களிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. கொரோனாப் பாதிப்பு காரணமாக கடந்த மார்ச் மாதத்துக்குப் பின்னர் கிரிக்கெட் போட்டியை நேரில் கண்டு களிக்க ரசிகர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு இருப்பது இதுவே முதல்முறையாகும்.

ஒருநாள் மற்றும் ரி20 போட்டித் தொடரில் அரங்கின் மொத்த இருக்கை வசதியில் 50 சதவீத ரசிகர்களையும், முதலாவது மற்றும் 3 ஆவது டெஸ்ட் போட்டிக்கு 50 சதவீத ரசிகர்களையும், 2 ஆவது டெஸ்ட் போட்டிக்கு 25 சதவீத ரசிகர்களையும், 4 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டிக்கு 75 சதவீத இரசிகர்களையும் அனுமதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி டெஸ்ட் போட்டிக்கு தினசரி சுமார் 25 ஆயிரம் ரசிகர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர். (ற-இ)

# தகுதிச்சுற்று ஆட்டம் அடுத்த ஆண்டில்

புதுடில்லி, நவ.12

இந்திய அணியின் கால்பந்து தகுதிச் சுற்று அடுத்த ஆண்டு நடைபெறவுள்ளது என ஆசிய கால்பந்துச்சங்கம் அறிவித்துள்ளது.

உலகக் கிண்ண கால்பந்து போட்டி 2022 ஆம் ஆண்டு கட்டாரிலும், ஆசிய கிண்ண கால்பந்து போட்டி 2023 ஆம் ஆண்டு சீனாவிலும் நடைபெறவுள்ளன. இதற்கான தகுதிச் சுற்றில் இந்திய அணிக்குரிய ஆட்டங்கள் இந்த ஆண்டு நடைபெறவிருந்த நிலையில், கொரோனா அச்சத்தால் தகுதிச் சுற்று தள்ளிவைக்கப்பட்டது.

இந்த நிலையில் தள்ளிவைக்கப்பட்ட இந்திய அணிக்குரிய தகுதிச்சுற்றுப் போட்டிகள் அடுத்த ஆண்டு மார்ச் மற்றும் ஜூன் மாதங்களில் நடைபெறும் என்று ஆசிய கால்பந்துச் சங்கத்தின் போட்டிகளுக்குரிய குழு அறிவித்துள்ளது. (ற-இ)

# மும்பை வெற்றிகளில் ரோகித், பொல்லார்ட்!

புதுடில்லி, நவ.12

ஐ.பி.எல்லில் ரோகித் சர்மா, பொல்லார்ட் ஆகியோர் மட்டுமே மும்பை இந்தியன்ஸ் அணி கிண்ணத்தை வென்ற ஐந்து முறையும் அந்த அணிக்காக விளையாடியுள்ளனர்.

இம்முறை ஐ.பி.எல்லில் டெல்லி அணியை எளிதாக வீழ்த்தி 5 ஆவது முறையாக மும்பை இந்தியன்ஸ் அணி வெற்றிபெற்றது. கடந்த வருடமும் கிண்ணத்தை வென்றது. இதன்மூலம் அடுத்தடுத்து வெற்றி பெற்ற 2 ஆவது அணி என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

இந்த அணிக்கு ஐந்து முறை வெற்றியைத் தேடிக் கொடுத்த அணித்தலைவர் என்ற சாதனையை ரோகித் சர்மா பெற்றுள்ளார். அதேபோல் ஐந்து முறையும் அணியில் இருந்த வீரர் என்ற பெருமையை பொல்லார்ட் பெற்றுள்ளார். (ற-இ)



இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 12.11.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.